**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

கடவுளுக்குப் பணிந்து வாழுங்கள்; அலகையை எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அது உங்களிடமிருந்து ஓடிப்போகும்.

(யாக்கோபு 4:7)

அவமானப்படுத்தபட்டார், தனிமைப்படுத்தப்பட்டார். சிறையில் அடைக்கப்பட்டார். ஒரு குறிப்பிட்டக் காலக்கட்டத்தில் ஆன்மீகப் போராட்டத்துக்கு உள்ளானார். சிறையிலேயே இறக்குமாறு கைவிடப்பட்டார். ஆனாலும் அவர் கொண்டிருந்த தூதுரைப்பணியில் விடாமுயற்சியுடன் இருந்தார். அவருடைய சொந்த மக்களாலேயே அவர் கல்லால் எறிந்து கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது.

இயேசுவின் பணிவாழ்வு முழுவதும் தாம் எதிர்கொண்ட எதிர்ப்பை சகித்துக்கொண்டார். பெரும்பாலும், மக்களின் அறியாமை, பிடிவாதம், பொறாமை அல்லது இலட்சியம் மற்றும் அவருடைய சொந்த மக்களிடமிருந்து அதிகமான எதிர்ப்பும், நிராகரிப்பு, வெறுப்பையும் அவர் அனுபவித்தார். அவரை மரணத்துக்கு உள்ளாக்கவும் சதிசெய்தனர். இயேசு இதைப் பற்றி அறிந்திருந்தாரா? நிச்சயமாக. அவரின் வேதனையை கற்பனை செய்து பாருங்கள். அவர் வேதனையில் இருக்கிறார் என்பதை அவர் ஒப்புக்கொண்டார். இருந்தபோதும், விண்ணகத் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் அவர் உறுதியாய் இருந்தார். அவர் வாக்களித்த நெருப்பின் திருமுழுக்கு, சிலுவை மரணம் ஆகியவை, நம் ஒவ்வொருவரின் திருமுழுக்கின் மூலம் நம் விண்ணகத் தந்தையின் மாட்சிக்கும் முடிவில்லா வாழ்வுக்கும் வழிவகுத்தது.

இயேசு எப்போதும் நேர்மையாக இருந்தார். வார்த்தைகளை மாற்றிப் பேசவில்லை. அவரைப் பின்பற்றியவர்கள், அவர் அமைதியைக் கொண்டு வருவார் என்று எதிர்பார்த்தார்கள் (எசா:11:6-9) ஆனால் அவர் அவர்களைத் திருத்தினார். தீயை மூட்டவே வந்தேன் என்று கூறிய இயேசு பழையனவற்றைத் தான் எரிக்கவந்தார். நம்மைத் தூய்மைப்படுத்தவும், தீர்ப்பு நாளுக்காக நம்மைத் தயாரிக்கவும் வந்தார். புதிய உலகத்தையும் புதிய ஒழுங்குமுறையைக் கொணரவும் வந்தார். அதிகாரம். பொருளாசை, பேராசை, அதிகார ஆசை ஆகியவற்றை மாற்றி நம் இதயங்களைப் பற்றியெறியச்செய்யவும், உலகை மாற்றியமைக்கவும் வந்தார். அப்போதும் இப்போதும் மாற்றம் அவ்வளவு எளிதில் வந்துவிடாது. மாற்றம் பிளவுகளையும், பதட்டத்தையும் கொண்டுவரும். நம்மிலும் அந்த பிளவுகள் ஏற்படும். இருந்தபோதிலும், அவரைப் பின்பற்றும் நாம் எதிர்கொள்ளும் முரண்பாடுகளை சந்திக்க அவர் நம்மைத் தயார்படுத்துகின்றார்.

இயேசுவைப் பின்பற்றுவதும் அவருடைய வழியில் நடப்பதும் மிகவும் கடினமானது; ஆனால் வெளிப்புற அழுத்தங்களோ, சொந்த அற்பத்தனங்களோ அவர் நம்முள் ஏற்படுத்திய தீப்பொறியை அடக்க நாம் அனுமதிக்கக் கூடாது. அல்லது நாம்பெற்றுக்கொண்ட நம் திருமுழுக்கு வெறும் ஒரு விழாவாகவோ, நினைவாகவோ மாற நாம் அனுமதிக்கக் கூடாது. நம்முடைய போராட்டங்களின் போது, நம் கண்களை இயேசுவை நோக்கி வைத்து, அவர் எப்போதும் நமக்கு உதவியாகவும் மீட்பராகவும் இருப்பார் என்று நம்பிக்கைக் கொள்வோம். கடவுளின் அரசு நிறுவப்படும்போது, மெசியாவின் அமைதி வரும் என்பதில் உறுதியாக இருப்போம்.

**இன்றைய வாசகங்கள்:**

எரேமியா 38: 4,6,8-10;
திபா: 40: 2-4, 18;
எபி: 12: 1-4;
லூக்: 12: 49-53.

INTERNAL CIRCULATION ONLY
BUL 33/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

14 ஆகஸ்ட் 2022

Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 20 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது



மாதாந்திர கருப்பொருள்:
**அன்னை மரியாவின் விண்ணேற்பு விழா (ஆகஸ்ட் 15)**

# தீமையை எதிர்த்துப் போராடுங்கள்

ஆம். நம் வாழ்வில் பலமுறை பலவிதமான போராட்டங்களைச் சந்தித்திருக்கின்றோம். நம் இல்லங்களில், நம் பணியிடத்தில், நம் சமூகங்களில் ஏன் திருஅவையிலும் கூட, பலவிதமான கருத்துகள், அணுகுமுறைகள், முடிவெடுப்பதில் பலவிதமான வேறுபாடுகளை எதிர்கொள்கின்றோம். இதிலிருந்து யாரும் தப்பித்ததாகத் தெரியவில்லை.

எரேமியா, கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இறைவாக்கினர். அவர் இறைவாக்குரைக்கும்போது அது அவ்வளவு எளிதாக இருக்கும் என்ற வாக்குறுதி அவருக்கு அளிக்கப்படவில்லை. அவரின் சொந்த குடும்பத்தினராலேயே அவர் ஒதுக்கித் தள்ளப்பட்டார்.